Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர். | - | மகபூப் பீ (எ) நூர்ஜகான் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க/பெ. | | ரஷீத்கான் | சமயம் | - | |
| கிராமம் | - | சரவணப்பாக்கம் | வயது | - | 68 |

11.07.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சரவணப்பாக்கம் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். புகார்தாரர் ஷாஜகான் எனது மகன். 1 வது எதிரி முன்சியா எனது மருமகள். மற்ற எதிரிகளை தெரியும். எனது மகனுக்கு 2004 ல் 1 வது எதிரியுடன் திருமணம் செய்து வைத்தோம். அவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளார்கள். அவர்களுக்குள் பிரச்சனை வந்தது. அதனால் தனியாக குடும்பம் வைத்தோம்.

2. அவர்கள் மேல் வீட்டிலும், நாங்கள் கீழ் வீட்டிலும் இருந்தோம். என்ன பிரச்சனை நடந்தாலும் 1 வது எதிரி அவரது அம்மா வீட்டிற்கு போய்விடுவார். பின்பு நாங்கள் போய் பஞ்சாயத்து செய்து அழைத்துவிடுவோம். நான் அவர்களை சென்னைக்கு கொண்டு போய் தனியாக குடும்பம் வைத்தேன். அங்கு 3 ம் நாளே பிரச்சனை பண்ணிக்கொண்டு 1 வது எதிரி அவருடைய அம்மா வீட்டிற்கு வந்துவிட்டார்.

3. மறுபடியும் பஞ்சாயத்து செய்து மேல் வீட்டில் தனியாக குடும்பம் வைத்தோம். அதன் பிறகு அவர்களுக்குள்என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு தெரியாது. மீண்டும் கிளம்பி

அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். நானும், எனது கணவரும் வீட்டில் இல்லை. வெளியே போய்விட்டோம். அந்த நேரத்தில் ஆவூரிலிருந்து இரண்டு வேனில் காரில் ஜமாத் காரர்களும்,1வது எதிரியின் அண்ணன், தம்பியும், அக்கா, தங்கச்சியும் 6 பேர் வந்தார்கள்.

4. வீட்டிற்குள்ளே இருந்த எனது மகன் ஷாஜகானை எல்லோரும் சேர்ந்து வெளியே இழுத்துவந்து அடித்துள்ளார்கள். அந்த சமயத்தில் நாங்கள் அங்கு இல்லை. போன் பண்ணி சொன்னவுடன் தான் நாங்கள் அங்கு வந்தோம். நாங்கள் அவர்களை குடும்பத்தை விட்டு வாழாத போ என்று சொல்லவே இல்லை. 1வது எதிரி அவராகவே கிளம்பி போய்விட்டார், பின்னர் வரவேயில்லை.

5. 1வது எதிரி வராததால் திரும்ப போய் 1வது எதிரியே விழுப்புரத்திலும், திருவண்ணாமலையிலும் கேஸ் கொடுத்தது. அதன் பிறகு 1வது எதிரி திருவண்ணாமலை கலெக்டர் ஆபிஸில் வேலை வாங்கி கொண்டு இன்னும் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறார். நடுவில் 1ம் எதிரியுடன் பேசிப் பார்த்தோம். எனது மகன்ஷாஜகான் 1 மாதம் ஜெயிலில் இருந்தார். அதன் பிறகு 1ம் எதிரிக்கு ரூ.2 லட்சம் பணம் கொடுத்தோம்.

6. அதன் பிறகு பேரன் படிக்க போகிறான் என்று சொன்னவுடன் 50 ஆயிரம் கொடுத்தேன். அதற்கு அப்புறம் ரூ. 11/2 லட்சம் கொடுத்தேன். நன்றாக பேசிக்கொண்டிருந்தார்கள், அதன் பிறகு பேசுவது இல்லை, போன் செய்தாலும் எடுப்பது இல்லை. போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சண்டை நடந்தது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 2 வேனில் ஜமாத்காரர்கள் வந்ததாக சொல்கிறேனே 50 பேர்கள் இருப்பார்களா என்றால் 100 பேர்கள் இருப்பார்கள். போலீசார் சண்டை நடந்த பிறகு எவ்வளவு நாள் கழித்து என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | வெல்டிங் வேலை |
| பெயர். | - | வெங்கடேஷ் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | தேவராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | சரவணப்பாக்கம் | வயது | - | 55 |

11.07.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சரவணப்பாக்கம் கிராமத்தில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 10 வருடத்திற்குமேல் இருக்கும் ஒரு நாள் காலை 11.30 மணியளவில் நான் ரோட்டில் நின்றிருந்தேன். அப்போது வேனை விட்டு கும்பலாக இறங்கி போனார்கள். போன உடன் கராமுரா என்று சத்தம் கேட்டது.

2. உடனே நான் என்ன என்று எட்டிப்பார்த்தேன். ஷாஜகானை பிடித்து வீட்டிலிருந்து வெளியே இழுத்துவந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. கும்பலாக இழுத்துவந்து அடித்தார்கள். நீங்களாம் யார், என்ன விஷயம் ஷாஜகானை அடிக்கிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு அவர்கள் எங்கள் தங்கச்சி குடும்ப பிரச்சனை நீங்க யாரும் இங்கு இருக்காதீர்கள், எடைய போங்க என்று சொன்னார்கள்.

3. அதற்கு நான் பிரச்சனை பேசி தீர்த்துகொள்ளுங்கள்,அடிக்கிற வேலை வேண்டாம் எதுவா இருந்தாலும் அவங்க அப்பா, அம்மாவிடம் பேசிக்கொள்ளுங்கள், கிளம்புங்கள் என்று

சொன்னேன். இருதரப்பும் மாறி மாறி பேசிக்கொண்டு அரை மணி நேரம் ஆனவுடன் கிளம்பிவிட்டார்கள். போலீசார் விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** -இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 484/2024

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர். | - | நாகராஜ் | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | சுப்பிரமணி | சமயம் | - | |
| கிராமம் | - | பெரியசெவலை | வயது | - | 38 |

11.07.2025

1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது பெரியசெவலை கிராமத்தில் வசித்து வேன் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 எனக்கு தெரியும். எதிரிகளை தெரியும். சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 11.30-12.00 மணியளவில் பெண் வீட்டிலிருந்து வேன் எடுத்துவந்து மாப்பிள்ளை ஷாஜகான் வீடு புகுந்து ஷாஜகானை அடித்தார்கள். நான் மறிக்க போனேன். அதன் பிறகு பிரச்சனை முடித்து வந்துவிட்டேன்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 10 வருடம் ஆகிவிட்டதால் அதை எப்போது போட்டேன் என்று நியாபகம் இல்லை. போலீசார் விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 ற்கு சொந்தமான வீட்டில் தான் வாடகை இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், அ.சா.1 ன் வீட்டில் வாடகைக்கு

இருந்ததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

(Sd/R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.